# கொடை வழங்கத் தகுதியான
# வரவேற்கத் தகுதியான,
# மதித்துப் போற்றத்தக்க தகுதியான
# மருத்துவர் (Dr) ஓம் பிரகாஷ் ஜி

Tamil Translation of Hindi Book

**"Āhuneyya, Pāhuneyya, Anjalikarṇiya Dr. Om Prakashji"**



விபாஸ்ஸனா ஆராய்ச்சி நிறுவனம்

# கொடை வழங்கத் தகுதியான
# வரவேற்கத் தகுதியான,
# மதித்துப் போற்றத்தக்க தகுதியான

## மருத்துவர் (Dr) ஓம் பிரகாஷ் ஜி

Tamil Translation of Hindi Book

“**Āhuneyya, Pāhuneyya, Anjalikarṇiya**

**Dr. Om Prakashji**”

ஸத்யேந்திர நாத் டான்டன்

லாஜ் டான்டன்

**விபாஸ்ஸனா ஆராய்ச்சி நிறுவனம்**

**தம்மகிரி இகத்புரி**

T04 - கொடை வழங்கத் தகுதியான, வரவேற்கத் தகுதியான, மதித்துப் போற்றத்தக்க தகுதியான,
மருத்துவர் (Dr.) ஓம் பிரகாஷ் ஜி அவர்கள்

© by Vipassana Research Institute
All rights reserved

First edition : June 2023

ISBN: 978-81-7414-458-4

**Price: Rs. /-**

**Published by:**
**Vipassana Research Institute**
Dhamma Giri, Igatpuri 422 403
Dist. Nashik, Maharashtra, India
Tel: [91] (2553) 244998, 243553, 244076,
244086, 244144, 244440
Email: vri_admin@vridhamma.org
Website: www.vridhamma.org

**Printed by:**
**Apollo Printing Press**
259, SICOF Ltd., 69 MIDC, Satpur
Nashik-422007, Maharashtra

# கொடை வழங்கத் தகுதியான, வரவேற்கத் தகுதியான, மதித்துப் போற்றுத்தக்க தகுதியான

## Contents

**முன்னுரை ........................................ 7**

மருத்துவர் ஓம் பிரகாஷ் அவர்களின் சுருக்கமான வாழ்க்கை விவரம் ........................................ 7

**ஆகுனேய, பாகுனேய, அஞ்சலிகரணிய - மருத்துவர் ஓம் பிரகாஷ் அவர்கள் ........................................ 16**

நகைச்சுவை குணம் ........................................ 19

நெப்போலியன் போனாபார்ட் பற்றிய குறிப்பு ........................................ 23

ஜப்பானியர்கள் பற்றிய குறிப்பு ........................................ 23

போர்க்களத்தை பற்றிய குறிப்பு ........................................ 24

நெருக்கமான உணர்வு ........................................ 24

பணிவு ........................................ 27

அவரது சொந்த தியானம் மற்றும் முகாம்களைக் கையாண்டது ........................................ 28

கர்மயோகி ........................................ 32

உடல் நலம் பற்றிய உரையாடல் ........................................ 33

படிப்பது - எழுதுவது ........................................ 33

**மருத்துவர் ஓம் பிரகாஷ் அவர்களுடன் இருந்த காலம் - சில நினைவுகள் ........................................ 39**

**பிற்சேர்க்கை ........................................ 41**

நோய் மற்றும் விபஸ்ஸனா ........................................ 41

மனம் மற்றும் ஆழ்மனம் ........................................ 47

உணர்ச்சிகள்- விபஸ்ஸனா கண்ணோட்டம் ....................53
உள்ளச் சமநிலையில் இருப்பது ............................................ 60
பிரம்ம விஹார்........................................................................ 68
தியானம் : இலக்கும், நோக்கமும்...............................................75
துன்பத்திலிருந்து விடுதலை......................................................79
இறந்தால் அழுவது ஏன்?...........................................................82
பிறப்பு இறப்பு சுழற்சி மீது எனக்குடைய பயத்தை அழியுங்கள்.......................................................................................85
நாள்பட்ட நோயின் சிகிச்சை மற்றும் விபஸ்ஸனா பயிற்சி........................................................................................... 89


**Vipassana Meditation Centre ............................................95**

# குரு சகோதரர்



சத்ய நாராயண கோயங்கா ஜி டாக்டர் ஓம் பிரகாஷ் ஜி

## இரண்டு குருசகோதரர்கள்
## தங்கள்
## மதிப்பிகுரிய குருவுடன்



சத்ய நாராயண கோயங்கா ஜி ஜ | ஸாயாஜி ஊ பாகின் | டாக்டர் ஓம் பிரகாஷ் ஜி

# முன்னுரை

## மருத்துவர் ஓம் பிரகாஷ் அவர்களின் சுருக்கமான வாழ்க்கை விவரம்

மருத்துவர் ஓம் பிரகாஷ் பர்மாவில் மாண்டலே நகரில் 7 அக்டோபர் 1912 இல் பிறந்தார். அவருடைய திருமணம் சௌபாக்யகாஷிணி சத்யபாஷிணி அவர்களுடன் 1938ல் நடந்தது. அவருக்கு இரண்டு சகோதரர்களும், ஆறு சகோதரிகளும் இருந்தனர். இவருக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். மகன் வழி பேரன்கள் இருவர், மற்றும் மகள் வழி பேரன்கள் இருவர் உள்ளனர். மகள் வழியில் ஒரு பேரன் பிறந்ததும் அவர், “இப்போது வயோதிகம் வலுக்கட்டாயமாக என் மேல் அமர்ந்துள்ளது” என்றார்.

பொதுவாக இந்த காலத்தில் உள்ளது போல் அவர் தன் பெயருடன் எந்த புனைப் பெயரையும் இணைத்துக் கொள்ளவில்லை.

## கல்வியறிவு

மருத்துவர் அவர்கள் ரங்கூன் பல்கலைக்கழகத்தில் எம்.பி.பி.எஸ் மற்றும் **“சாகித்ய ரத்ன”** பட்டங்கள் பெற்றார். ஆரிய சமாஜின் சிறப்பான சேவைக்கான பட்டமான “ஆரிய ரத்ன” பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது.

அவர் 1939 இல் சுயமாக மருத்துவப் பணியைத் தொடங்கினார். அவர் நோயாளிகளிடம் சிகிச்சைக்காக கட்டணம் வாங்கியதில்லை. அவரவர் விருப்பப்படி பணம் கொடுக்கும் சுதந்திரம் இருந்தது. அவர் இலவச சிகிச்சை மையம் (டிஸ்பென்ஸரி) நடத்தினார். அதில் தொடர்ந்து நோயாளிகளின் கூட்டம் இருந்தது. சிகிச்சைக்காக அவர் ஒருவருடைய இல்லத்திற்குச் சென்றால் அவர் செல்வந்தராக இருந்தாலும் அதற்கு அவர் கட்டணம்

வாங்கமாட்டார்.

சிலருக்கு இது மிகவும் வித்தியாசமாக தோன்றும். அவர்கள் அவருடைய சட்டைப்பையில் கட்டாயமாக பணத்தைத் திணிப்பார்கள். இது அவருக்குப் பிடிக்காது. சிகிச்சையின் போது அவர் தனக்கு தெரிந்தவர், தெரியாதவர், எல்லோரிடமும் ஒரே மாதிரி நடந்துகொள்வார். மற்ற நோயாளிகளைப் பார்க்கும் போது அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த எவரேனும் இடையில் நுழைந்தால், அதை அவர் அனுமதிக்க மாட்டார். நடு இரவிலும் சில சமயம் அவர் தாமாக நோயாளிகளின் இல்லத்திற்குச் சென்று அங்கு மணிக்கணக்கில் நோயாளியின் நிலைமை சீராகும் வரை தங்கி இருப்பார். பிறகு வீடு திரும்பி வரவும் அவர் யாரையும் தொந்தரவு செய்ய மாட்டார். “நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் ஸ்கூட்டரில் சென்று விடுவேன் அல்லது வேறு ஏதாவது விதத்தில் சென்று விடுவேன். தாங்கள் கஷ்டப்பட வேண்டாம்” எ ன்பார்.

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் அவர் ராணுவத்திலும் சிகிச்சை அளிப்பதற்காக பணிபுரிந்தார். அங்கே அவர் ‘மேஜர்’ என்கிற பதவியில் பணி புரிந்தார். சில காலத்திற்கு “உலக சுகாதார நிறுவனம் - வோர்ல்ட் ஹெல்த் ஆர்கனைசேஷன்” (World Health organization) மற்றும் இந்திய தூதரகத்திலும் பணி புரிந்தார்.

அவர் விபஸ்ஸனா ஆசிரியர் ஸாயாஜி ஊ பாகின் அவர்களின் குடும்ப மருத்துவராகவும், மற்றும் அவரது நண்பர் சத்யநாராயண கோயங்கா அவர்களின் மருத்துவராகவும் இருந்தார். இவர்கள் இருவரும் ஸாயாஜி அவர்களிடம் விபஸ்ஸனா தியானம் கற்றார்கள். அதனால் குரு சகோதரர்களாக இருந்து ஒருவருக்கொருவர் மிகவும் மரியாதையும், அன்பும் கொண்டிருந்தனர். 1969 இல் கோயங்கா, பர்மாவிலிருந்து பாரதத்திற்கு வந்து தங்கினார். மருத்துவர் அவர்கள்

எண்பதுகளில் பர்மாவை விட்டு வெளியேறி டில்லியில் தங்கினார்.

************

மருத்துவர் அவர்களின் தந்தை முழுவதுமாக 'ஆர்ய சமாஜில் இணைந்திருந்தார். இதனால் மருத்துவர் அவர்களும் இந்த நிறுவனத்துடன் நெருக்கமாக இருந்தார். அது அவர்களின் வாழ்வின் இறுதிக் கட்டம் வரை தொடர்ந்தது. பர்மாவில் இந்த அமைப்பு இவருடைய முயற்சியால் நடப்பது போல் தோன்றியது.

குழந்தைகளிடம் நல்ல பண்புகளை வளர்க்க அவர் பதினெட்டு வயதிலேயே 'ஆர்ய குமார் சபா› என்னும் அமைப்பை நிறுவினார். அவர் ஆரிய சமாஜில் ஒரு அனாதை விடுதியும் தொடங்கினார். அதை நடத்தும் பொறுப்பையும் தானே ஏற்றுக் கொண்டார். அதற்கு பிரசாரம் செய்பவர்களின் குறைவான எண்ணிக்கையைக் கண்டு தானே பிரசாரகர்களை தன் இல்லத்தில் தங்க வைத்து அவர்களைத் தயார் செய்தார். அவர் உண்மையில் அவர்களை பண்டிதர்களாக உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அவருக்கு உபநிடதங்களில் மிகுந்த ஈடுபாடு இருந்தது.

அவர் "ஹிந்தி ஸொஸைட்டி வெல்பேர் **(Hindi society welfare Board)** போர்ட்டி"ன் செயலாளராகவும் இருந்து, வறியவர்களுக்கு நிதி உதவி செய்வதில் முயற்சி எடுப்பவராக இருந்தார்.

தில்லியில் இருக்கும் போது ஆரிய ஸமாஜ் உறுப்பினரான நோயாளிகளுக்கு இலவச சிகிச்சைக்காகச் சென்றார். அங்கே செல்ல அவர் டாக்ஸி அல்லது வேறு ஏதாவது வாகனத்தை எதிர்பார்க்க மாட்டார். மாறாக அவர் இதற்காக நிறுவனத்தின் பணம் செலவழிக்கக் கூடாது என்பார்.

************

மருத்துவர் அவர்கள், விபஸ்ஸனா தியானத்தின் முதல் முகாமை, ஸாயாஜி ஊ பாகின் அவர்களிடம் நிறைவு செய்தார். இந்த முகாமில் நிர்வாண நிலையை அடைந்து ‘சோதாபன்னா› என்னும் விடுதலையின் முதல் கட்டத்தை எய்தினார். இதன் பிறகு அவரது நடத்தையால் மிக உயர்ந்த நிலைகளை அடைந்து விட்டார் என்று தெரிந்தாலும் அவர் வெளியில் எதையும் சொல்லவில்லை. அவர் எப்பொழுதும் பிறருடைய நிலைமையைப் பற்றியே பேசினார், தன்னைப் பற்றிய விஷயங்களைப் பொறுத்த வரை மௌனமாக இருந்தார். யாரேனும் இதைப் பற்றி கேட்டால் அதை அவர் தவிர்த்து விடுவார்.

************

மருத்துவர் அவர்களின் முழு வாழ்வும் போராட்டமாக இருந்தது. சிறு சிறு நிகழ்வுகளும் போராட்டமாக இருந்தன.

சிறு வயதிலேயே அவரது தகப்பனார் தவறி விட்டதால் குடும்பத்தின் முழுப் பொறுப்பையும் அவர் ஏற்க வேண்டியதாயிற்று. வீட்டின் நிதி நிலைமை நன்றாக இல்லை. தந்தையின் ஆயுள் காப்பீட்டு காப்பீடு மூலம் மிகவும் சிரமத்துடன் பத்தாயிரம் ரூபாய் கிடைத்தது. இதன் மூலம் குடும்பத்தின் செலவுகளைச் சமாளிக்க முடிந்தது. எந்த நிலையிலும் கவலை அடையவில்லை.

பர்மாவில் இராணுவ ஆட்சியில் எந்த ஆதாரமும் இல்லாமல் அவரை சிறையில் அடைத்த போது அந்த துன்பங்களைத் தன் குறிப்பில் எழுதி உள்ளார். அதில் தான் எவ்வாறு உள்ளச் சமநிலையோடு இருந்தார் என்று எழுதியுள்ளார்.

அவர் வீட்டிலும் கடினமாக வாழ்க்கை வாழ்வதை வழக்கமாக கொண்டிருந்தார். ஒரு கால கட்டத்தில் அவருக்கு தனது வீட்டை விட்டு குடும்ப

உறுப்பினர்களுடன் காட்டில் வசிக்க நேர்ந்தது. அங்கே அடுப்பு எரிக்க விறகுகளை வெட்டி ஆற்றில் மிதக்க விட்டு, தான் அதன் பின்னால் ஓடி, வீடு வந்ததும் அவைகளை ஆற்றிலிருந்து வெளியே எடுத்து. தனது சகோதரர்களுடன் அதை வெட்டி வைப்பார். அந்த நேரத்தில் “தான் ஒரு எம்.பி.பி.எஸ்’ மருத்துவர். நான் ஏன் இந்த வேலையை செய்ய வேண்டும்?”, என்கின்ற எண்ணம் அவருக்கு வரவில்லை.

************

## படித்தது எழுதுவது

அவருக்குப் படிப்பில் மிகவும் ஆர்வம் இருந்தது. அவரிடம் நிறைய நூல்கள் இருந்தும் புது புத்தகங்களைத் தேடுவார். அவர் தனது வாழ்நாளில் நிறைய எழுதி அவைகள் பிரசுரமாயின. அவைகளில் நிறைய ‘ஆரிய ஸமாஜ்› தொடர்பானவை; மற்றும் விபஸ்ஸனா தியானம் செய்த பின் அதை பற்றி நிறைய எழுதினார்; அவைகள் தம்ம கிரியின் “விபஸ்ஸனா பத்திரிகாவில்” வெளிவந்து சாதகர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக இருந்தன. அவர் வேத மந்திரங்களின் பொருளை எழுதி அமெரிக்காவுக்கு அனுப்பி அங்குள்ளவர்களுக்கு அவற்றின் அர்த்தம் (பொருள்) புரிய வைத்தார்.

## தினசரி வாழ்க்கை

மருத்துவர் அவர்கள் பணியில் மிகவும் ஈடுபாடு உள்ளவராக இருந்தார். அவர் எந்நேரமும் ஏதாவது ஒரு வேலையை செய்து கொண்டிருப்பார். அவரது வாழ்க்கையில் சோம்பல் என்பதற்கான இடமே இல்லை. அவரது தினசரி வாழ்க்கை உள்ளச் சமநிலையுடன் இருந்தது; ஒவ்வொரு சமயமும் அனைவரிடமும் நட்பு நிறைந்ததாகவே இருந்தது. சிறு வயதிலேயே கோபம் சிறிதும் வந்ததில்லை; ஆனால் சில நேரங்களில் தனது

விருப்பத்திற்கு மாறாக ஏதாவது நடந்தால் சிறிது எரிச்சல் வரும்; விபஸ்ஸனாவிற்குப் பிறகு அதுவும் நீங்கி விட்டது. அவர் முழுமையாக அமைதியாக சாந்தமாக இருந்தார். அவர் தொடக்கத்திலேயே பிறர் விஷயத்தில் தலையிட மாட்டார்; ஆனால் விபஸ்ஸனாவிற்குப் பிறகு அதைப்பற்றி மேலும் கவனமாக இருந்தார். மற்றவர்கள் பேச்சில் ஈடுபட்டு இருக்கும் போது அவர் மௌனமாக இருந்தார். சில சமயம் அவரது மனைவி சிலரிடம் சினம் கொண்டால் அவர் அவளைத் தடுத்து ”எது நடக்கிறதோ அதை அப்படியே நடக்கட்டும்; விட்டுவிடு” என்பார்.

அவர் அவளிடம் கோபப்பட மாட்டார்; அதனால் அவளுக்கு சினம் கொள்ளக் கூடாது என்கிற எண்ணம் வந்தது. சில சமயம் பிறரிடம் நமக்கு என்ன கொடுக்கல் வாங்கல் உள்ளது? அதனால் பிறரின் விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்பார். அவரது மனைவியும் பக்குவப்பட்ட சாதகராக இருந்ததால் அவரது விருப்பப்படி நடந்து கொண்டாள்.

மருத்துவர் அவர்களின் வாழ்க்கையின் சிறப்பம்சம் என்னவென்றால் கடுமையாக நடக்காமலே மக்களை நல்வழிப்படுத்தினார். எல்லோருக்கும் தனக்கு சமமான நிலையை அளித்து அவர்களுக்குப் புரிய வைத்தார். தன்னை விட மட்டமாக யாரையும் எண்ண மாட்டார். ஒரு சமயம் மிகவும் அன்பாக அவர் தனது தங்கையிடம் “மாமா அவர்களுக்கு முன் காலை அகட்டி ஏன் உட்காருகிறாய்?” என்றார். அவளிடம் சிறிதும் கோபப்படாமல், “சுபத்ரா! பெரியவர்கள் முன் காலை அகட்டி உட்காரக் கூடாது” என்று மட்டும் கூறினார்.

அவர் இல்லத்தில் உள்ள எல்லோரிடமும், அவர் வயதில் சிறியவரோ, பெரியவரோ முழு அக்கறையோடு இருந்தார். இதன் காரணமாக எல்லோரும் அவரால் பயன் அடைந்தார்கள். இல்லத்தில் சில நேரங்களில் ஹோமம்

ஆகியவை நடந்தால் அவர் அதை தடுக்க மாட்டார். அவரது எண்ணப்படி ஆரிய ஸமாஜை சேர்ந்தவர்கள் எளிதாக விபஸ்ஸனா செய்பவர்களாக இருப்பார்கள்.

மருத்துவர் அவர்களுக்கு மௌனம் மிகவும் விருப்பமானதாக இருந்தது. அவருக்கு இரைச்சல் பிடிக்காது. அவருக்கு தோட்டக்கலையில் ஈடுபாடு இருந்தது. அவர் எங்கே சென்றாலும் மரக்கன்றுகள் நடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவரால் நட்ட கன்றுகள் இன்று மரமாகி ஆரிய ஸமாஜ் வளாகத்தில் உள்ளன.

அவர் அளிக்கும் நன்கொடை வித்தியாசமாக இருந்தது. அவர் எங்கே எவ்வளவு நன்கொடை அளித்தார் என்பது தெரியாது. சிலர் அவரிடம் கடன் வாங்கி திருப்பி செலுத்தும் போது நூறு ரூபாயைத் தங்களிடம் வைத்துக்கொண்டு குறைவான மீதமுள்ள பணத்தை அவரிடம் கொடுப்பார்கள். அந்த பணம் அவர்களுக்கு மிகுந்த அதிர்ஷ்டம் அளிக்க வல்லதாக இருந்தது.

அவர் அனாதை இல்லங்களில் பெண்களின் திருமணத்தையும் தனது மகள்களின் திருமணம் போன்று நடத்தினார்.

************

அவர் பர்மா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றுக்கு மட்டுமே செல்வார். பர்மாவில் அவர் மிகவும் மக்களால் விரும்ப பட்டவராக இருந்ததால் மக்கள் வெள்ளம் போல் அவரை சந்திக்க வந்தனர். வெகு காலம் பிரிந்துவிட்டு மீண்டும் சந்தித்ததைப் போன்று அவர்கள் அவரிடம் நடந்து கொண்டனர். அமெரிக்காவிலும் இவரால் மக்கள் பெரிதும் கவரப்பட்டார்கள். இவரை தன் சொந்த தந்தையாகக் கருதினர்; இவர்தான் தங்களுக்கு சரியான வாழ்க்கை வாழ கற்றுக் கொடுத்தார் என்றார்கள்.

************

மருத்துவர் அவர்களின் உற்ற நண்பர் திரு கோயங்கா 1988 இல் அவருக்கு விபஸ்ஸனா கற்றுத் தரும் ஆசிரியர் பொறுப்பை அளித்தார். மற்றும் 1995 இல் அவரை தலைமை ஆசிரியராக (ஆசார்யாவாக) நியமித்தார். அவர் பாரதம் மற்றும் அமெரிக்காவில் நிறைய முகாம்கள் நடத்தினார். அதனால் பலர் நன்மை அடைந்தனர். அவர் மாணவர்களின் விபஸ்ஸனா பற்றிய சந்தேகளுக்கு நல்ல முறையில் விளக்கம் அளிப்பார். அவருடைய விளக்கத்தால் கண்ணாடி போல் எல்லாம் தெள்ளத் தெளிவாக விளங்கும். அவரது சகோதரி அவரை தனது குருவாக முதல் இடத்திலும், சகோதரனாக இரண்டாவது இடத்திலும் எண்ணினார்.

தனது வாழ்வின் பிந்தைய நாட்களில் (இறுதி கட்டத்தில்) அவர் கீதையின் மேற்கோள்காட்டி “எனக்கு இப்போது செய்வதற்கு ஒன்றும் இல்லை. மக்களும் என்னை பின்பற்றி வாழ வேண்டும் என்பதற்காக வாழ்கிறேன்” என்று கூறுவது வழக்கம்; இதைப் போல் மக்களுக்கு எப்படி வாழவேண்டும் என்ற வழியைக் காட்டினார். அவரது ஒவ்வொரு செயலும் பாடம் கற்கும் படியாக இருந்தது. அவர் ஒரு வேறுபட்ட மனிதராக இருந்தார். அவரது வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம் போன்று இருந்தது. எவர் வேண்டுமானாலும் படித்து பின்பற்றலாம்.

************

சில வருடங்களுக்கு முன் அமெரிக்கா சென்ற போது அவரது உடல் நிலை மோசமாகி ‘லாஸ் ஏஞ்சல்ஸ்’ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கே அவர் உயிர் பிரிந்தது. அவர் அங்கே சென்ற நேரத்தில் நினைவுடன் இருந்தார். மற்றும் அங்கே இருந்த மருத்துவரிடம் நிறைய பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவரது மனைவியும் உடனிருந்தார். பிறகு மருத்துவர்‘கோமா’வில் போய்விட்டார். சில சமயம் அவரது

கண்கள் திறந்து பிறகு மூடி விடும். அவரது இறப்புக்குப் பின் அந்த மருத்துவ மனையில் மருத்துவர், அவர் (ஓம் பிரகாஷ் ஜி) மற்றும் அவரது மனைவி பற்றி சொன்னார் "வி தாட் வி மெட் ஒன் செயின்ட்,பட் வி அக்சுவலி மெட் டூ", **'we thought we met one Saint but actually met two",** நாங்கள் ஒரு துறவியை சந்தித்ததாக நினைத்தோம்; ஆனால் உண்மையில் இருவரை சந்தித்துள்ளோம்".

அவர் இறந்ததும் சிறுமியர் மற்றும் குழந்தைகள் மிகவும் அழுதார்கள். அவர்களுக்கு தங்கள் உறவினரை இழந்தது போல் இருந்தது. அவர் யாரை தனது சொந்தமாக கருதினார் என்று சொல்வது கடினம்.

[***குறிப்பு:*** மருத்துவர் அவர்களின் வாழ்க்கையை பற்றி மேலே கூறிய விவரங்கள் தில்லியில் இருக்கும் அவரது தங்கை திருமதி சுபத்திரா வர்மா அவர்களின் "நினைவுகள்" என்பதை ஆதாரம் கொண்டவை.]

*************

[மற்றொரு "நினைவுகள்" தில்லியில் உள்ள அவரது மருமகள் அவர்களின் குறிப்பிலிருந்து;]

மருத்துவர் அவர்கள் தினம் அதிகாலையில் எழுந்து விடுவார். ஒரு நாள் பொது விடுமுறையானதால், வீட்டில் உள்ளவர்கள் தாமதமாக எழுந்தார்கள். மருத்துவர், மற்றவர்கள் நாள் முழுவதும் வேலை செய்து களைப்பால் உறங்குகிறர்கள். அதனால் நான் அவர்கள் வேலையில் பங்கு கொள்ள வேண்டும்" என்று எண்ணினார். அவர்கள் எழுந்திருக்கும் முன் துடைப்பத்தை எடுத்து வீடு முழுவதும் சுத்தம் செய்தார்; வீட்டில் உள்ளவர்கள் எழுந்ததும் வீட்டின் சுத்தத்தைப் பார்த்து வியந்து போனார்கள். டாக்டரிடம் கேட்டதும் நடந்தது தெரிந்தது. அதற்குப் பின் துடைப்பத்தை அவர் கண்ணுக்கு தெரியாதபடி மறைத்து வைத்தார்கள்.